BOC

Bankers to the Nation

# மணிவிழா நாயகன்

## திரு. நடராஜா சிவரத்தினம்

உதவிப் பொது முகாமையாளர், இலங்கைவங்கி.

(வடபிராந்தியம்)

# வாழ்வும் பணியும்



LIVING MEMORIES OF AN OUTSTANDING PERSONALITY

## MR. N. SIVARATNAM

B.A(S.L), A.I.B, F.I.B(S.L), P.G.Dip-in - Pub. Admin

ON HIS REACHING 60

நண்பர் குழு : இலங்கைவங்கி, வடபிராந்தியம்.

தேசத்தின் வங்கியாளர்

BOC

Bankers to the Nation

# மணிவிழா நாயகன்

## திரு. நடராஜா சிவரத்தினம்

உதவிப் பொது முகாமையாளர்
இலங்கைவங்கி (வடபிராந்தியம்)

# வாழ்வும் பணியும்

**LIVING MEMORIES OF
AN OUTSTANDING PERSONALITY**

## MR. N. SIVARATNAM

**B.A(S.L), A.I.B, F.I.B(S.L), P.G.Dip-in - Pub. Admin**

**ON HIS REACHING 60**

**25-02-2010**

நண்பர் குழு:
இலங்கை வங்கி, வடபிராந்தியம்.

*"நீ வாழ்வது உண்மையெனில்*
*முடியாது என்று ஒருபோதும் சொல்லாதே*
*நித்திலம் யாவும் நித்திய மில்லை*
*இன்றைய பொழுதிற்குள் நாளை முடியலாம்*
*நீ வாழ்வது உண்மையெனில்*
*முடியாது என்று ஒருபோதும் சொல்லாதே"*

14ம் நூற்றாண்டின் உலகப் புகழ் பெற்ற ஓவியன் லியார்னோ டாவின்சியின் மரண வாக்கு மூலமே இப் பொன் வரிகள் **"முயன்றால் முடியாது"** என்று ஒன்றுமில்லை என்பதை ஆணித்தரமாக நம்பி தனது மதிநுட்பத்தாலும், புத்திபூர்வமான அணுகுமுறைகளாலும் சாதித்துக் காட்டிய எளிமையான ஒரு சாமானியனாக, சாதனையாளனாக திகழும் இலங்கை வங்கி வடமாகாண உதவிப் பொது முகாமையாளர் உயர்திரு. நடராஜா சிவரத்தினம் அவர்கள் தனது நான்கு தசாப்த கால வங்கிச் சேவையினின்றும் ஓய்வு பெறுகின்ற வேளையில் அவர் நடந்து வந்த பாதையை பின்னோக்கிய ஒரு பாய்சலாக; இவ்விவரணத்தை உங்கள் முன் நிறுத்துகின்றோம். இப்பாய்சலில் எவ்வாறு ஒரு சாமானியன் தனது விடாமுயற்சி தன்னம்பிக்கை, தான் கொண்ட தொழிலை ஒரு "தவமாக" இயற்றி கல்வியாளனாகவும் புலமையாளனாகவும் மிளிர்ந்தான் என்பதை நீங்கள் தரிசித்தல் கூடும்.

## பள்ளிப்பருவம்

வல்வெட்டித்துறை, ஆதிகோவிலடி என்ற மிகப் பின்தங்கிய வறுமையிலும் வறிய மக்களை பெரும்பான்மையினராகக் கொண்ட கிராமத்தில் நடராஜா - வள்ளியம்மாள் தம்பதிகளின் ஒரேயொரு மூத்த சகோதரியுடனும் ஆண் பிள்ளைகளுள் 4வது ஆண்பிள்ளையாகவும் 25.02.1950இல் உதித்த நம் நாயகன் தனது ஆரம்பக் கல்வியை வல்வெட்டித்துறை சிவகுரு வித்தியாசாலையிலும், வல்வை சிதம்பராக் கல்லூரியிலும் பயின்று அப்போதைய JSC (8ம் வகுப்பு) பரீட்சையில் சித்தியடைந்தபோது இயல்பாகவே சட்டத்துறையில் தான் கொண்ட ஆர்வம் காரணமாகவும் உற்ற நண்பன் K. பாலச்சந்திரன் (அல்லா)

அவர்களின் தூண்டுதலாலும் விஞ்ஞானத் துறையைத் தவிர்த்து கலைப் பிரிவில் அப்போதைய SSC பரீட்சையிற் தோற்றி சிறப்புச் சித்தி பெற்று உயர்தரத்தில் கற்கும் தகுதியைப் பெற்றார். இதில் இவர் சமஸ்கிருதத்தையும் ஒரு பாடமாகக் கற்றுத் திறமைச் சித்தி பெற்றார்.

இருப்பினும் சிதம்பராக் கல்லூரியில் உயர்தரக் கலைப்பிரிவில் இவரும் இன்னொரு மாணவியும் (பவானி) மட்டுமே கற்க நேர்ந்தது. உயர்தர மாணவர் மன்ற வாராந்த சந்திப்பொன்றில் அன்றைய இவரது சக விஞ்ஞான பிரிவு மாணவனும் நண்பனுமாகிய இன்று லண்டனில் பிரபல பல் வைத்திய நிபுணராகத் திகழும் வைத்திய கலாநிதி V பழனிவேல் கலைப் பாடங்களை பயில்பவர்களை தரங்குறைந்த மாணவர்கள் என மதிப்பீடு செய்து "**இலை ஏன் பச்சையாக இருக்கிறது**"? இதற்கு பதில் சொல்ல முடியாத உனக்கு ஏன் உயர்கல்வி? என்று விடுத்த கேள்வியை ஒரு சவாலாக ஏற்று விஞ்ஞான பாடங்களை SSC இல் படிக்க முயன்றபோது பாடசாலை நிர்வாகம் அதனை நிராகரித்தது. இதனால் இவரது பாடசாலைக் கல்வி நின்று போனது. இருப்பினும் நண்பர் ஒருவரான K. ஆனந்தனின் தூண்டுதலினால் அவருடன் இணைந்து பருத்தித்துறையில் இருந்த தனியார் கல்வி நிறுவனத்தில் வர்த்தகப் பாடங்களைப் பயின்று அதிலும் சித்தி பெற்றார். அதாவது வர்த்தகப் பிரிவில் உயர் தரம் (A/L) கற்பதற்கான தகுதியைப் பெற்றார்.

இருப்பினும் விஞ்ஞான பாடங்களைப் பயில வேண்டுமென்ற இவரது தாகம் தணியவில்லை. அப்போதைய பருத்தித்துறைப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. K. துரைரட்ணம் அவர்களின் முயற்சியால் தொண்டமனாறு வீரகத்திப் பிள்ளை மகாவித்தியாலயத்தில் SSC விஞ்ஞானப் பிரிவில் கற்று 8 பாடங்களிலும் சிறப்பு சித்தியடைந்து உயர்தர வகுப்பில் விஞ்ஞானத்துறையில் கற்கத் தகுதிபெற்றார். இங்கு இவர் SSC இல் கலை, விஞ்ஞானம், வர்த்தகமென 16 பாடங்களில் சித்திபெற்றமை குறிப்பிட வேண்டியதாகும்.

விஞ்ஞானப் பிரிவில் ஆசிரியராக இருந்தவரும் அப்போதைய அதிபருமான கரவெட்டியைச் சேர்ந்த திரு. தம்பிப்பிள்ளை பாடம்

நடத்திய முதல்நாள் குறிப்பிட்ட "Failures are the Pillers of success" (தோல்விகளே வெற்றிக்கான தூண்கள்) என்னும் வாசகங்கள் இன்னும் தன் செயற்பாடுகளின் பின்புலமாக நிற்கின்றது என்பதை குறிப்பிடுவதில் அவர் மகிழ்ச்சியடைகிறார். எப்பொழுதும் ஒரு ஆங்கிலப் பழமொழியுடன் பாடத்தை ஆரம்பிக்கும் ஆசிரியர் இரண்டாம் நாள் எழுதிய Proverb - "Necessity is the Mother of Invention" (தேவையே கண்டுபிடிப்பின் தாய்) என்பதாகும்.

## வங்கி வாழ்க்கை

இவரது குடும்பச் சூழல் வறுமையானது. இவரது தாயாரின் திடகாத்திரமான உழைப்பு இவரது குடும்பத்தை தாங்கி நின்றது. கல்வி வாசனையே இல்லாத அந்தத் தாயின் அனுபவக் கல்வி தன் மகனை உயர்தரம் வரை கற்க வைத்தது. ஆனால் தகுந்த வழிகாட்டி இன்மையாலும், குடும்ப வறுமையாலும் வங்கி அல்லது அரச சிறாப்பர் வேலையில் சேர விரும்பினார். வங்கிக்கு விண்ணப்பங்கள் கோரியபோது எழுதுவினைஞர் /காசாளர் பதவியில் எழுதுவினைஞர் என்ற பதத்தை அழிக்க நேர்ந்ததால் காசாளராக 16.05.1970 இல் தனது 20ஆவது வயதில் இலங்கை வங்கியில் அப்போதைய தலைமைக் காரியாலயமான கொழும்பு யோர்க் வீதியில் இணைந்தார். அங்கே ஒரே தரத்திலிருந்த சேவையில் மூத்த சிலர் காலனித்துவ ஆட்சியின் எச்ச சொச்சங்களாக விளங்கினர். முதல் மாதச் சம்பளத்தை உரிய நாளில் பெறமுடியாது மனமுடைந்தார்.

மாத்தளையில் புதிய கிளை திறந்தபோது தனது வங்கியியல் ஆளுமையை விருத்தி செய்யும் நோக்குடன் அங்கு 1972இல் வலிந்து கேட்டு இடமாற்றம் பெற்றார். மாணிக்கவாசக சுவாமிகள் குருந்த மரநிழலில் ஆட்கொள்ளப்பட்டதுபோல திரு. சிவரத்தினம் அவர்கள் திரு. K. சிவகணநாதன் என்ற வங்கியியற் பேரறிவாளனின் கடைக் கண்பார்வைக்குள் அகப்பட்டார். இவர் திரு. சிவரத்தினத்திற்கு கண்டிப்பான தந்தையாகவும் வழிகாட்டும் ஆசானாகவும் திகழ்ந்தார். கிளையின் முகாமையாளரான திரு. K. சிவகணநாதனின் கடைக்

கண்பார்வையால் திரு. சிவரத்தினம் அவர்கள் வங்கியாளர் நிருவாக பரீட்சையில் ஆரம்ப நிலைப்பகுதி (Part I of the AIB - 1976) சித்தியடைந்தார்.

1976இல் மீண்டும் சென்றல் றோட் கிளைக்கு இடமாற்றப்பட்டு அங்கு கடமை புரிந்தபோது 1977இல் இளநிலை நிறைவேற்று (Grade IV) உத்தியோகத்தராகப் (அப்போதைய Supervisor) பதவியுயர்வு பெற்று கல்முனைக்கு இடமாற்றம் பெற்றார். கல்முனை கமநல சேவைக் கிளையின் பொறுப்பதிகாரியாகக் கடமை புரிந்தவேளை இவரது அயராத முயற்சியால் அது சகல சேவைகளையும் உள்ளடக்கிய முழுமையான கிளையாகப் புதுப் பொலிவு பெற்றது. 1978இல் கிழக்கில் வீசிய பெரும்புயலால் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களிற்கு மானிய அடிப்படையில் அரசால் வழங்கப்பட்ட கடன் வழங்கல் மற்றும் கண்காணிப்பிற்கான குழுவில் வங்கியின் அம்பாறை மாவட்ட (District Fisheries Co-ordinating Officer-(DFCO)) பிரதிநிதியாகச் சேவையாற்றினார். இக்காலத்தில் அம்பாறையில் நடைபெற்று வந்த வங்கியாளர் நிருவாகப் பரீட்சைகளை கல்முனையில் நடாத்த கடும்முயற்சிகளை மேற்கொண்டு வெற்றி கண்டதுடன் தானும் வங்கியாளர் நிர்வாக டிப்ளோமா பட்டத்தை இக்காலத்தில் பெற்றுக் கொண்டார். (AIB in 1983) அத்துடன் இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தின் கல்முனை மாவட்ட அமைப்பாளராகவும் விளங்கினார்.

1983இல் அப்போதைய உப முகாமையாளர் தரத்திற்கு பதவி உயர்த்தப்பட்டு யாழ். மாவட்டத்திற்கு இடம்மாற்றம் பெற்றார். இவ்வேளையில் இவரின் பிறந்த மண்ணிற்கு அருகில் உள்ள பருத்தித்துறையில் கடமை புரியும் வாய்ப்பு திரு. N. சீவரத்தினம் அவர்களுக்கு கிடைத்தது. அதேவேளை அரசியல் ரீதியாக 1983இல் மூண்டெழுந்த யூலை இனக் கலவரம் மிதவாத அரசயிலை நிராகரித்து ஆயுதப் போராட்டமாகப் பரிணாமம் பெறத் தொடங்கியது. இதன் முதற்கட்ட உச்சமாக 1987இல் இடம் பெற்ற "லிபரேசன் ஒப்பரேசன்" இராணுவ நடவடிக்கையால் பருத்தித்துறை கிளை மந்திகைக்கு இடம்பெயர வேண்டியதாயிற்று. அவ்வேளையில் திரு. சிவரத்தினம்

அவர்கள் சமூகப் பொறுப்புடன் வங்கி ஆவணங்களைப் பாதுகாத்து இடமாற்றுவதில் தன் உயர் அதிகாரிகளிற்கு பூரண ஒத்துழைப்பு வழங்கி நின்றார்.

இலங்கை வங்கி பருத்தித்துறைக் கிளை ஊழியர் விளையாட்டு நலன்புரிக் கழகத்தினூடாக மந்திகை வைத்தியசாலை மனநோயாளர் விடுதியை மீளத்திருத்துவதிலும், பராமரிப்பதிலும் முன்னின்று உழைத்தார். இக்காலத்தில் இடம்பெற்ற குண்டுவீச்சுக்கள், இடப்பெயர்வுகள் காரணமாக மக்கள் உடல் ரீதியாகவும், உளரீதியாகவும் பாதிப்படைந்திருந்தனர். அதனால் இக்காலகட்டத்தில் இச்சேவை மதிப்பிட முடியாததாக இருந்தமை மனம் கொள்ளப்பட வேண்டியதாகும்.

வங்கியாளனாக தனது பிறந்த மண்ணிற்கு பயனுள்ள பங்களிப்பை வழங்க வேண்டுமென்ற உன்னத நோக்குடன் வறுமையிலும் வறியவர்களாகவும், எதிர்காலத்தைப் பற்றி எந்தவித சிந்தனையுமின்றி வாழ்ந்த ஆதிகோவிலடி மக்களிடையே சிக்கனம், சேமிப்பு என்பனவற்றை ஊக்குவிக்க, போரூட் நிறுவனத்தின் அனுசரணையுடன் ஆதிகோவிலடியில் யாழ் மாவட்டத்திலேயே முதலாவது (FORUT) போரூட் சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கம் எனும் அமைப்பின் கீழ் ஒரு வங்கியை ஆரம்பித்து சிறுவர்களிற்கான கணக்குகள் சேமிப்பு கணக்குகள், சிறு தொழிற்கடன்கள் என்பனவற்றை ஊக்குவித்து அவர்களின் வாழ்வாதாரத்தை பேண்தகு முறையில் முன்னெடுத்துச் செல்ல அரும் பாடுபட்டு வெற்றி கண்டார். இதைவிட வல்வெட்டித்துறை பொது வைத்தியசாலை நலன்புரிச் சங்கத்தின் பொருளாளராக இருந்து அதன் அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்தார்.

1989இல் உதவி முகாமையாளர் தரத்திற்குப் பதவி உயர்வு பெற்று சுன்னாகம், கிளிநொச்சிக் கிளைகளில் கடமை புரிந்து 1995இல் முகாமையாளர் தரத்திற்கு பதவி உயர்த்தப்பட்டார்.

## உயர் முகாமைத்துவத்தில்................

இவர் முகாமையாளராகக் காங்கேசன்துறை, சுன்னாகம், யாழ்ப்பாணம் இரண்டாம் கிளை ஆகியவற்றில் கடமை புரிந்தார் இவர் காங்கேசன்துறைக் கிளையின் முகாமையாளராகக் கடமைபுரிந்தபோது அப்பிரதேச மக்கள் நாட்டின் அசாதாரண சூழ்நிலையில் இடம்பெயர்ந் திருந்தமையால் கிளையும் தற்போதைய வடமாகாண அலுவலகம் இயங்கும் இடத்தின் ஒரு பகுதியில் இயங்கியது. இவ்வேளையில் இடம்பெயர்ந்த அம்மக்களிற்கு தனது சமூகப் பார்வையூடாக இயன்ற உதவிகளைப் புரிந்தார். சுன்னாகம் கிளையின் முகாமையாளராகப் பணி புரிந்தபோது தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை மனநோயாளர் விடுதிப் பராமரிப்பில் ஆர்வம் காட்டினார். யாழ். இரண்டாம் கிளையில் கடமை புரிந்தவேளை அதன் 25ஆவது வெள்ளி விழாவையொட்டிச் சிறப்பு மலரொன்றை வெளியிட்டதுடன் அதன் மூலம் பொதுவாக யாழ். மாவட்ட இலங்கை வங்கியின் செயற்பாடுகளையும் இரண்டாம் கிளையினதும் சேவைகளையும் ஆவணப்படுத்தினார்.

## 1995 ஆம் ஆண்டு இடப்பெயர்வு காலத்தில் நல்கிய சேவைகள்.......

இக்காலகட்டத்தில் வலிகாமத்தில் இடம்பெற்ற பாரிய ஒட்டு மொத்த இடப்பெயர்வினால் இங்கிருந்த சகல வங்கிக் கிளைகளும் சாவகச்சேரிக்கும், வடமராட்சிக்கும் மிகச் சொற்ப ஆவணங்களுடன் தற்காலிகமாக நகர்த்தப்பட்டன.

இவ்வேளையில் இவர் யாழ். மேற்தரக்கிளையில் உதவி முகாமையாளர்தரத்தில் கடமையாற்றினார். இக்கிளை திருமதி. K. துரைராஜா அவர்களின் முகாமைத்துவத்தில் இருந்தது. திரு. ந. சிவரட்ணம் மற்றும் தற்போதைய அச்சுவேலிக் கிளை முகாமையாளர் திரு. T. புவனேந்திரன் ஆகியோர் வடமராட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தமையால் தங்கள் கடுமையான தியாகங்கள் மூலமாக இக்கிளையை பருத்தித்துறையிலும் ஏனைய எமது வங்கிக் கிளைகளை சாவகச்சேரியிலும் நடாத்த உதவினர். இக்காலகட்டத்தில் இலங்கை வங்கியானது ஏனைய வங்கிகளைவிட முன்னோடி வங்கியாக

திகழவைத்ததுடன் அளப்பரிய சேவைகளை செய்து எமது வங்கியின் "தேசத்தின் வங்கியாளர்" என்ற பெயரையும் நிலைநிறுத்தினர்.

குண்டூசி தொடக்கம் மின்பிறப்பாக்கி வரை உபகரணங்களை ஒழுங்கு செய்ததுடன் சக ஊழியர்களுக்கான இருப்பிட வசதிகளையும் செய்து கொடுத்ததை நினைத்து அவர் திருப்திப்படுவதை நண்பர் களாகிய நாம் அறிவோம். ஆனாலும் இடப்பெயர்வின் போது திரவப்பணம் உட்பட வங்கியின் ஆவணங்களைக் காப்பாற்றிய ஊழியர்களுக்கு தான் எவ்வளவு முயன்றும், அப்போதைய உதவிப்பொது முகாமையாளர் உட்பட உயர் முகாமைத்துவம் எந்தவித பாராட்டுக் கடிதங்களையோ (Appreciation Letter) உயர்பதவிக்கான விசேட புள்ளிகளையோ (Merit marks) இதுவரை வழங்கவில்லை என்றும் மனநெருடலுடன் இருப்பதாகக் கூறினார். இவ்விடத்தில் அக்கால சேவையின் போது உயிர் துறந்த திரு. அல்பிறட் போன்ற உத்தியோகத்தர்களையும் அந்தளவு கடுமையாக உழைத்த ஏனைய ஊழியர்களினது சேவையையும் நினைவு கூருகின்றார்.

2004ஆம் ஆண்டில் சிரேஸ்ட முகாமையாளர் தரத்திற்கு பதவி உயர்வு பெற்று பதுளை ஊவா மாகாண அலுவலகத்தில் கணக்காய்வு பகுதித் தலைவராகவும், (Team Leader Audit Dept.) பின் வன்னிப் பிரதேச மாவட்ட முகாமையாளராகவும் (Area Manager - wanni) கடமை புரிந்து 2005ஆம் ஆண்டின் இறுதியில் யாழ். மேற்தரக் கிளையின் (Jaffna Super Grade Branch) சிரேஷ்ட முகாமையாளராகவும் கடமை புரிந்தார்.

## இலங்கை வங்கி தலைமைப்பீடத்தின் பார்வையில்.

இவரது அயராத உழைப்பையும் வங்கியின் மேம்பாட்டிற்கான செயற்பாடுகளையும் இனங்கண்டுகொண்ட உயர் பீடம் இவரை மேலும் ஊக்குவிக்கவும், கௌரவிக்கவும் தீர்மானித்து இருதடவைகள் கடல் கடந்த பயிற்சிப் பட்டறைக்காக தெரிவு செய்தனர்.

1. 1997 இல் லக்னோ - இந்தியா (Lucknow - India)
2. 2008 இல் பூனே - இந்தியா (Pune - India)

இரண்டாவதான பூனே இந்தியா (Puna - India) விற்கான தனது பயிற்சிப் பட்டறையின் போது ஏற்பட்ட அனுபவங்களை ஏனைய வங்கியாளர்களிற்கும் வரலாற்றின் ஆர்வலர்களிற்கும் உதவும் முகமாக "மும்பையில் மூன்று மணி நேரம்" என்ற பயணக் கட்டுரையின் மூலமும் குறுநூலாகவும் பத்திரிகைகள் மூலமும் வெளியிட்டு தனது தனித் தன்மையைக் காட்டி உள்ளமை இங்கு சிறப்பாக சுட்டிக்காட்டப்பட வேண்டிய ஒன்றாகும்.

இக் காலகட்டத்தில் மும்பை "தாஷ் கொட்டல்" தீவிரவாதிகளால் தாக்கப்பட்ட செய்தியும், "தாஷ் கொட்டல்" தோற்றம் பற்றிய விளக்கம் தாங்கிய இவரது கட்டுரையும் சமகாலத்தில் யாழ் குடாநாட்டுப் பத்திரிகைகளில் வெளியாகியமையும் குறிப்பிடத்தக்கது.

**கல்வியாளனாக................**

1983இல் வங்கியாளர் நிருவாக டிப்ளோமா பட்டம் பெற்ற இவர் 1995இல் யாழ். பல்கலைக்கழகத்தில் கலைப்பட்ட வெளிவாரி மாணவராகத் தன்னைப் பதிவு செய்து 1997இல் (B.A General Degree Jaffna University) பட்டதாரியானார். 2001ம் ஆண்டு யாழ். பல்கலைக் கழகத்தால் முதன்முதலாக ஆரம்பிக்கப்பட்ட பொது நிர்வாகத்திற்கான பட்டப்பின் டிப்ளோமா கற்கைநெறியை தனது 50 வயதைத் தாண்டிய வேளையிலும் ஒரு மாணவனாக [Post Graduate Diploma in Public Administration (Merit Pass)] அமர்ந்து கற்றுத் தேறினார். இது ஒன்றே கல்வி கற்பதில் இவர் கொண்ட தணியாத தாகத்திற்கு தக்க சான்றாகும். வங்கியாளர் நிறுவகத்தின் மூலமும் அதன் செயற்பாடுகளை பிராந்திய மட்டத்தில் விஸ்தரிப்பதிலும் ஆற்றிய தன்னலமற்ற சேவையையும் நீண்ட காலமாக (தசாப்தங்களாக) IBSL ஆல் அங்கிகரிக்கப்பட்ட ஆலோசகராகவும் இணைப்பாளராகவும் (Authorised Councillor) திறம்பட அர்பணிப்பான சேவையை வழங்கி வருவதையும் கௌரவித்த வங்கியாளர் நிர்வாகம் இவரிற்கு FIB (Fellow of the institute of Bankers - Sri Lanka) 2004ல் கௌரவப்பட்டத்தினை வழங்கிக் கௌரவித்தது. தேசிய ரீதியாக, யாழ் மாவட்டத்தில் இலங்கை வங்கியாளர் நிறுவகத்தினால் வழங்கப்படும்

இப்பட்டம் பெற்ற முதல் யாழ் மாவட்ட வங்கியாளர்களுள் முதன்மை ஆனவர் என்ற சிறப்புக்குரியவராகவும் திகழ்ந்து வருகின்றார்.

இவர் வங்கித்துறையின் மிகமுக்கிய நிறுவனமான Association of Professional Bankers of Sri Lanka வின் அங்கத்தவராக இருந்து தனது பங்களிப்பை வழங்கி வருகிறார்.

அது மட்டுமல்லாது இவரது வங்கித்துறைக் குருவான திரு. K. சிவகணநாதன் அவர்களின் பெயரில் கொழும்பில் அமைக்கப்பட்டுள்ள அறக்கொடை நிதியத்தின் (Mr. K. Sivakananathan's Memorial fund) ஊடாக வடமாகான வங்கித்துறைக் கல்வியாளர்களின் செயற்பாடுகளுக்கான இணைப்பாளராகவும் பணிபுரிந்து வருகிறார்.

இவரது தன்னலமற்ற சேவையைப் பாராட்டி லண்டன் வாழ் இலங்கை வங்கியின் கடல்கடந்த ஊழியர் சங்கம் (BOC Past Employees Association London) என்ற அமைப்பினர் கடந்த செப்ரெம்டர் 2009 இல் இவரையும் இவரது துணைவியாரையும் லண்டன் நகரில் ஒரு சிறந்த இராபோசன விருந்துபசாரத்தின் மூலம் கௌரவித்தனர்

## சமூகப் பணியாளனாய்..............

திரு. சிவரத்தினம் அவர்களின் சமூகப்பணி இரண்டு நிலைப்பட்டது.

1. தன்தொழில் சார்ந்தது
2. தன் பிறந்த மண் சார்ந்தது

அடிப்படையில் வறுமை, தகுந்த வழிகாட்டல் இன்மை என்பனவற்றால் தன் கல்வியைத் தொடர முடியாமலும், தகுந்த தொழிலை தேர்வு செய்ய முடியாமற்போன அனுபவங்களும் புதிதாக வங்கித் தொழிற்துறைக்குள் நுழைபவர்களிற்கு ஏற்படக் கூடாது என்பதற்காக அவர்களிற்கு உரிய வசதிகளையும் வாய்ப்புக்களையும் கிடைக்கக் கூடிய வளங்களுடன் வழங்க இலங்கை வங்கியாளர் நிறுவக பரீட்சைகளிற்கு மாணவர்களைத் தயார்படுத்த வகுப்புக்களை ஒழுங்கு செய்து தானே நடத்தினார். பல ஆண்டுகள் தடையின்றித் தொடர்ந்த

வங்கியாளர் நிர்வாகத்தின் யாழ். மாவட்ட இணைப்பாளராக நியமிக்கப்பட்டு வங்கியாளர் நிர்வாகத்தின் வடபிராந்திய நிலையத்தை (Regional Centre of IBSL) யாழ் மாவட்ட வங்கியாளர் சங்கத்தின் உதவியுடன் (Bankers' Association - Jaffna district) ஸ்தாபித்து அதன்மூலம் இவ்வகுப்புக்கள் தொடர வழி சமைத்தார். இக்காலத்தில் இலங்கை வங்கியாளர் நிறுவகக் கற்கை நெறி இலண்டன் வங்கி பட்டய நிறுவகத்துடன் (Chartered Institute of Bankers - London) ஒன்றிணைக்கப் பட்டமையால் வங்கியாளர் அல்லாதவர்களும் இக்கற்கையைப் பயின்று பட்டம் பெற வழி வகுத்தவர். இது இவருடைய சமூகப் பணியின் மைல் கல்லாகும்.

தொண்ணூறுகளில் நிலவிய அரசியல் பொருளாதார சூழல்களால் வங்கியாளர்கள் அனைவரையும் ஒன்றிணைத்து செயற்பட வேண்டியதன் அவசியத்தை உணர்ந்த அக்கால இலங்கை வங்கி யாழ். பிரதேச முகாமையாளர் திரு. K. கணேசமூர்த்தி அவர்களின் முயற்சியால் யாழ். மாவட்ட வங்கியாளர் நிறுவனம் உருவாக்கம் பெற்று செயற்பட்டது. அக்காலத்தில் திடீர்திடீர் என ஏற்படும் அசாதாரண நிலைகளில் அனைத்து வங்கியாளராயும் ஒன்றிணைந்து செயற்பட இது பெரும் பங்களிப்பை வழங்கியது. திரு. K. கணேசமூர்த்தி அவர்கள் ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து இந்நிறுவனம் செயலிழந்தது. யாழ். இரண்டாம் கிளையின் முகாமையாளராகப் பதவியேற்றதைத் தொடர்ந்து யாழ். நகரில் இயங்கிய தனியார் வங்கிகள், அரச வங்கிகளின் பிராந்திய அலுவலகங்கள் என்பனவற்றுடன் தொடர்புகளை ஏற்படுத்தி மீண்டும் இந நிறுவனத்திற்குப் புத்துயிர் அளித்தார். அத்துடன் இந் நிறுவனத்தின் ஊடாக யாழ். மாவட்டத்தில் உள்ள வங்கிகளில் கடமைபுரிந்து ஓய்வு பெற்ற ஊழியர்களை வருடாவருடம் கௌரவித்து வங்கிச் சமூகத்தின் ஒற்றுமையை வலியுறுத்தவும் சமூக ஊடாட்டத்தை (interaction) வலுப் படுத்தவும் முக்கிய பங்கு வகித்தார். இன்றும் இதன் தலைவராக இருந்து (The President of The Bankers' Association - Jaffna District). தொழில் சார்ந்த சமூகப்பணிக்கும் வங்கியாளர் ஒற்றுமைக்கும் பாலமாகத் திகழ்கின்றார்.

2005இல் யாழ். மேற்தரக் கிளையின் சிரேஸ்ட முகாமையாளராகப் பதவியேற்றவுடன் வங்கியாளர்கள் அனைவரையும் ஒன்றிணைப்பதன் மூலம் அவர்களின் பொதுவான பிரச்சினைகளை வென்றெடுக்க அழுத்தங்களை கொடுக்க முடியும் என்ற தன் சிந்தனையைச் செயற்படுத்தத் தொடங்கினார். முதலில் யாழ். மாவட்டத்திலுள்ள இலங்கை வங்கி ஊழியர்கள் அனைவரையும் ஒன்றிணைத்து யாழ். மாவட்ட இலங்கை வங்கி ஊழியர் விளையாட்டு நலன்புரி இலக்கியக் கழகம் (Sports, Welfare and Art & Literary Association Bank of Ceylon, Jaffna District.) தோற்றம் பெற மூலவரானார். இதன்மூலம் ஓய்வுபெறும் ஊழியர்களை கௌரவித்தல், சமகால ஊழியர்களின் பிள்ளைகளினதும் சகஊழியர்களின் கல்விசார் திறமைகளைக் கௌரவித்தல் மற்றும் பயனுள்ள விரிவுரைகளை ஒழுங்கு செய்தல் போன்ற நற்பணிகளைப் புரிந்தார்.

யாழ். மாவட்ட இலங்கை வங்கி வரலாற்றில் பதிவிடப்பட வேண்டிய இவரது பணி "ஊக்கி" (The Catalyst) என்ற காலாண்டு சஞ்சிகையின் தோற்றமாகும். வட கிழக்கு மாகாண இலங்கை வங்கி ஊழியர்கள் சிங்கள மொழியில் நடைபெறும் பயிற்சி நெறிகளில் பங்கு கொள்ள முடியாமலும் வங்கிப் பதவியுயர்விற்கான போட்டிப் பரீட்சைக்கு தமிழில் போதிய பாடவிதானங்கள் இன்மையாலும் வங்கித்துறையில் ஏற்படும் நவீன மாற்றங்கள் தொடர்பான தகவல்கள் பற்றிய அறிவு இன்மையாலும் பாதிக்கப்பட்டிருந்த வேளை பல்கலைக்கழக பேராசான்கள், வெளியுலகக் கல்விமான்கள், வங்கியியலில் துறைசார் அனுபவம் பெற்றவர்களின் படைப்புக்களின் ஊடாக இக்குறைதீர்த்தவர், தானே அதன் பிரதம ஆசிரியராக இருந்து தன் வேலைப்பழுவின் மத்தியிலும் ஆக்கங்களைப் படித்து ஒன்றிணைத்து வெளிக்கொணரும் சாதனையாளருமாவார்.

வங்கித் தொழிலிற்கு வெளியே பல்வேறு திணைக்களங்களின் தலைவர்களையும் ஒன்றிணைத்து "முகாமையாளர் சங்கம்" (Managers Forum) என்ற அமைப்பினூடாக மாதாந்தம் பலதுறைசார்ந்த கருத்தரங்குகளை ஒழுங்கு செய்து சமகால சூழலில் தேவைப்பட்ட அறிவை அனைவரும் பெற ஊற்றாகத் திகழ்ந்தவர்.

இவரது விசேடித்த குணம் யாதெனில் எவரொருவருடைய திறமைகளையும் குணாதிசயங்களையும் இலகுவாக கண்டறியும் திறமை பெற்ற இவர் அதன் காரணமாக ஏதாவதுதொரு பணியை முடிப்பதற்கு இலகுவாகவும் சீக்கிரமாகவும் தொலைபேசி தொலைநகல் மூலமாகவே சிறப்பாக செய்து முடிக்கும் ஆற்றலைக் கொண்டுள்ளார் அதனால் இருந்த இடத்திலேயே சகல ஒழுங்கு களையும் செய்யும் ஆற்றல் கொண்ட சாதனையாளர் மட்டுமல்லாது தலைமைத்துவ பண்புகள் ஒருங்கே அமைந்த செயல் வீரன் ஆவார்.

தன் பிறந்த மண்ணில் 1987 இல் வாழ்வாதாரத்திற்காக போருட் வங்கிக் கிளையை ஆரம்பித்து நெறிப்படுத்தியவர். இக்கிராமச் சிறார்களின் கல்வி வளர்ச்சியில் ஆர்வம் கொண்டு தன் தாயாரின் நினைவாக "**நடராஜா வள்ளியம்மாள் கல்வி ஊக்குவிப்பு நிதியத்தை**" ஆரம்பித்து அதன்மூலம் ஆண்டு 5 புலமைப் பரிசிற் பரீட்சை, க.பொ.த (சா/த) பரீட்சை, க.பொ.த (உயர்தரம்) பரீட்சைகளில் சிறப்புச் சித்தி பெற்றவர்களைக் கௌரவித்து அவர்களின் கல்வி ஆர்வத்தை ஊக்குவித்து வருகின்றார்.

அதேபோல் தன் பிறந்த மண் ஆதிகோவிலடியில் திருமணமாகி 50 ஆண்டுகள் இணைந்து வாழ்ந்த தம்பதியினரை கௌரவிக்கும் மரபொன்றையும் பேணி வருகின்றார்.

இவர் வல்வை ஒன்றியம் எனும் அமைப்பின் போசகராகவும் தெரிவு செய்யப்பட்டு தனது வல்வை மக்களுக்கான பங்களிப்பை செய்து வருகிறார்.

## படைப்பாளியாக...........

1995இல் "ஆதிகோவிலடி ஜெயம்" என்ற புனை பெயரில் ஈழநாதம் தினசரியில் "முப்பது வருடங்களாக ஓடிக் கொண்டிருக்கின்றேன்" என்ற விவரணத்தின் மூலம் படைப்பாளியாக அறிமுகமாகி காலத்திற்குக் காலம் விவரணக் கட்டுரைகள் பந்தி

எழுத்துக்கள் எனப் பல படைப்புக்களை தினக்குரல், உதயன், வலம்புரி தினசரிகளில் எழுதியுள்ளார். (ஆழப்பதிந்த வேர்கள் - தினக்குரல்)

இவரது முதலாவது நூலாக "ஆழக்கடல் வென்றவர்கள்" வெளியாகியது. இது அக்காலத்தில் "அன்னபூரணி" என்ற பாய்மரக் கப்பல் அமெரிக்கா சென்ற கதையை அக்கப்பலின் தண்டயலாக இருந்த இரத்தினசாமி அவர்களுடனான பேட்டி வடிவில் அமைத்திருந்ததுடன் அது ஒரு காலத்தின் பதிவாகவும் அமைந்திருந்தது.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த திரு. ப. மீனாட்சிசுந்தரம் அவர்களால் எழுதப்பட்ட "வரலாற்றில் வல்வெட்டித்துறை" என்ற நூல் ஓர் பெறுமதி மிகு ஆவணமாகும். பல்வேறு ஆதாரங்களை, புள்ளி விபரங்களை ஒன்றுதிரட்டி வெளியிடப்பட்ட உன்னத நூலாகும். இந்நூலின் பின்னிணைப்பாக வல்வெட்டித்துறையுடன் சம்பந்தப்பட்ட திரு. சிவரத்தினம் எழுதிய சில ஆக்கங்கள் இணைக்கப்பட்டமை சிறப்பாகும். இது விடயத்தில் இவ் ஆவண நூலை ஆக்க தூண்டிய இவரது பங்களிப்பு பாராட்டப்பட வேண்டும். அத்துடன் வல்வெட்டித்துறை அரும்பொருள் காப்பகம் ஒன்றையும் நிறுவியுள்ளார்.

காலத்திற்கு காலம் உள்ளூர் ஊடகங்களில் இவரது நேர் காணல்களும் பதிவாகி உள்ளன (அவற்றுள் சில பின்னிணைப்பாக சேர்கப் பட்டுள்ளன)

## வடமாகாண செயற்பாட்டு முகாமையாளராக..

வடமாகாண செயற்பாட்டு முகாமையாளராகப் பதவி ஏற்றது முதல் யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்துக் கிளைகளையும் கணினி மயப்படுத்தி வலைப்பின்னல் அமைப்பிற்குள் உள்வாங்க முக்கிய பங்கு வகித்தார். ஊழியர்களின் நன்மைகருதி காலத்திற்குக் காலம் பயிற்சிகளை வழங்க பிராந்திய பயிற்சி மையம் ஒன்று ஸ்தாபிக்கப்படுவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தியதுடன் பதவியுயர்வுக்கான போட்டிப் பரீட்சைகளிற்கு முன் ஊழியர்களைத்

தயாா்படுத்த பயிற்சி வகுப்புக்களை ஒழுங்கு செய்ததுடன் சிறந்த பெறுபேறுகளையும் பெற வழி செய்தார். கொழும்பில் நடைபெற வேண்டிய போட்டிப் பரீட்சைகள், பதவி உயர்வு பரீட்சைகள், ஆட்சேர்ப்பு பரீட்சைகள் மற்றும் இவர்களுக்கான பயிற்சிப் பட்டறைகள் யாவற்றையும் யாழ்ப்பாணத்திலேயே நடாத்த ஏற்பாடு செய்தமை ஒரு வரலாற்று சிறப்பாகும்.

ஒன்றிணைந்த யாழ் மாவட்ட இலங்கை வங்கி விளையாட்டு வீரர்களின் திறமையை சரியாகப் பயன் படுத்தி பல வெற்றிகளையும் எமது வங்கிக்கு பெற்றுத் தருவதற்கு வழி காட்டியாக உள்ளார்

## வடமாகாண உதவிப் பொது முகாமையாளராய்.............

31.10.2008 முதல் வடமாகாண உதவிப் பொதுமுகாமையாளர் பதவி ஏற்றதன் பின் தனது அதிகாரத்தை சமூக மேம்பாட்டிற்குப் பயன்படுத்தி சாதனைகள் செய்தார். அவையாவன:

அ. க.பொ.த (உயர்தரம்) பரீட்சையில் யாழ். மாவட்டத்தில் 3A பெற்ற சாதனையாளர்களை பாராட்டிக் கௌரவித்தமை. இது 2008ம் ஆண்டு முதல் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

ஆ. வலம்புரி தினக்குரல் பத்திரிகைகளின் அனுசரணையுடன் மாணவர்களின் நலன் கருதி கருத்தரங்குகள் நடாத்தியமை.

இ. ஊடகவியலாளர்களின் உதவியுடன் கல்விமேம்பாட்டிற்காக முன்னோடிப் பரீட்சைகளை நடத்தியும் கலையின் ஓர் அங்கமான சித்திரத்தை ஊக்குவிக்க போட்டிகளை நடத்தி சிறந்த மாணவர்களை கௌரவித்து வந்துள்ளார்.

## சிறப்பு விருதுகள்

யாழ் மாவட்ட வங்கி ஓய்வூதியர் சங்கத்தினால் 2002ம் ஆண்டு "வங்கிச்சாதனையாளர்" (Out standing Banker for the year - 2002) விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். 2008ம் ஆண்டின் பிரபல பிரமுகராக

(Most out standing Professional for the year - 2008) இவரை கொழும்பு உன்னத தலைமைத்துவம் மற்றும் ஆளுமை அபிவிருத்தி நிலையத்தினால் (CENLEAD) கௌரவிக்கப்பட்டார். இது தொடர்பாக 23 ஆகஸ்ட் 2009 தினக்குரல் ஆசிரியபீடம் பின்வருமாறு குறிப்பிடுகின்றது. (பின்னிணைப்புகளைப் பார்க்கவும்)

இவர் வங்கியாளர் நிறுவனத்தின் பிராந்தியமையத்தை யாழ்ப்பாணத்தில் நிறுவன மூல காரணமாக இருந்தமை வட மாகாண அலுவலர்கள் மாணவர்களை இந்நிறுவனத்துடன் தொடர்புறுத்தும் இணைப்பாளராகவும் வளவாளராகவும் செயற்படுகின்றமை, யாழ் மாவட்ட முகாமையாளர்கள் மன்றத்தின் நிறுவுனர்களில் ஒருவராக விருந்து மக்களின் மேம்பாட்டிற்கான கருத்தரங்குகளை பல்வேறு விடயங்களில் ஏற்பாடு செய்துவருகின்றமை, யாழ் மாவட்ட வங்கியாளர் சங்கத்தின் தலைவராகச் செயற்படுகின்றமை, யாழ் மாவட்ட இலங்கை வங்கி விளையாட்டு நலன்புரி இலக்கிய மன்றத்தின் காலாண்டு வெளியீடான **"ஊக்கி"** இதழின் ஆசிரியராக உள்ளமை, வடமாகாண உதவிப்பொது முகாமையாளராக இருந்து புதுமையான பல சேவைகளை ஏழைமக்களிற்கு வழங்கிவருகின்றமை, வங்கித்தொழிலில் அங்கத்துவப் புலமையுடன் செயற்படுகின்றமை, யாழ் மருத்துவபீடம் புதிதாக உருவாக்கிய யாழ் ஊட்டச்சத்து சங்கத்தின் (Jaffna Nutritional Society) பொருளாளராக பணிகளில் ஈடுபடுத்தி தன்னலமற்ற உன்னத சேவையை வழங்கி வருகின்றமை, போன்ற இன்னோரன்ன இவரது தெரிவிற்கான காரணிகளாக் குறிப்பிடப்பட்டுள்ளன.

இந்தவகையில் வங்கித்தொழிலில் முகாமைத்துவ நிலையை அடைந்த காலம் முதல் இவரின் அர்ப்பணிப்பான சேவையின் அறுவடைகளே இவ்விருதுகள் ஆகும்.

**சமூக நிறுவனங்களில்.............**

இவரது பிறந்த மண்ணான வல்வெட்டித்துறை அரச வைத்தியசாலை நலன்புரிச்சங்க காப்பாளராகவும் வல்வெட்டித்துறை

ஆவணக்காப்பகத்தின் பொதுச்செயலாளராகவும் யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் ஊட்டச்சத்துகச் சங்கப் பொருளாளராகவும் யாழ் மாவட்ட அமைதிக்கும் சமாதானத்திற்குமான (Peace Committe of Jaffna) ஒருங்கிணைப்புக் குழு பொருளாளராகவும் பணியாற்றுவதன் மூலம் சமூக நிறுவனங்களுடனும் தன்னை இணைந்து செயற்பட்டு வருபவராகவும் திகழ்கின்றார்.

## சாதனையின் பின்னால்.......

இச்சாதனைகளின் பின்னால் குடும்பச்சுமை தாங்கி நாயகனின் சாதனைகள் வெற்றி பெற தன் பக்திவெற்றியால் மானசீகமாக உந்து சக்தியாய் நின்று

*"முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்*
*மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்*
*பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்*
*பெயர்ந்தும் அவனிற்கே பிச்சியானாள்*
*அன்னையையும் அத்தனையும் அன்றே நீந்தாள்*
*அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தை*
*தன்னை மறந்தாள் தன் நாமம் கெட்டாள்*
*தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே"*

என்ற நாவுக்கரசரின் வாக்கிற்கு இலக்கணமாக திகழும் திருமதி நளினி சிவரத்தினம் அவர்களை இச்சந்தர்ப்பத்தில் நன்றியுடன் நினைவு கூரவேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

இவரது செயற்பாடுகளை முன்மாதிரியாகக் கொண்டு இவர்களின் இரு பெண் பிள்ளைகளும், ஒரேயொரு ஆண் மகனும் கல்வித்துறையில் வளர்ந்து வருகிறார்கள்.

**"அனைவரும் வளமுடன் வாழ வாழ்த்துகிறோம்"**

## Service Record

| Period of Service | Branch/Dept. worked | Nature of duty |
|---|---|---|
| 16.05.1970 - 12.07.1971 | York Street | Asst.Cashier |
| 13.07.1971 - 19.01.1792 | Pettah | Asst.Cashier |
| 20.01.1972 - 31.05.1975 | Matale | Asst.Cashier |
| 01.06.1975 - 30.09.1975 | York Street | Asst.Cashier |
| 01.10.1975 - 28.02.1977 | Central Road, Pettah | Asst.Cashier |
| 01.03.1977 - 09.07.1978 | Kalmunai ASC Branch | O.I.C |
| 10.07.1978 - 02.09.1984 | Kalmunai Main Branch | Credit Officer/District Co-ordinator for Fisheries Activities |
| 03.09.1984 - 31.10.1985 | Chunnakam | Credit Officer |
| 01.11.1985 - 30.05.1991 | Point Pedro | O.I.C Clearing |
| 01.06.1991 - 20.11.1994 | Chunnakam | Credit Officer |
| 21.11.1994 - 14.06.1995 | Kilinochchi | Credit Officer, Assisting the Manager |
| 15.06.1995 - 07.08.1996 | Jaffna SGB | Segmental Manager - Clearing |
| 08.08.1996 - 07.02.2001 | Kankesanthurai | Branch Manager |
| 08.02.2001 - 31.08.2001 | Chunnakam | Branch Manager |
| 01.09.2001 - 03.10.2004 | Jaffna 2nd SGB | Branch Manager |
| 04.10.2004 - 06.04.2005 | Uva Province Office | Senior Manager (Audit) |
| 07.04.2005 - 21.07.2005 | Vavuniya A/O | Area Manager(Wanni) |
| 22.07.2005 - 15.11.2006 | Jaffna SGB | Senior Manager |
| 16.11.2006 - 30.10.2008 | Northern Province Office | Operations Manager & covering up duties of Area Manager(Jaffna) &AGM(NP) |
| 31.10.2008 - 24.02.2010 | Northern Province Office | Asst.General Manager (NP) |

வடமாகாண வங்கி ஓய்வூதியர் நலன்புரிச் சங்கம்

උතුර පළාතේ විශ්‍රාමික බැංකුකරුවන්ගේ සුභසාධක සංගමය

# Northern Province Banks' Pensioners' Welfare Association

Our Ref :
Your Ref :

Karanthan Road,
Neervely South,
Neervely.

Date: 19th May 2003.


Patron
Mr.K.Kanesamoorthy (B.C.)
F.C.I.B. (London)

President
Mr.R.Sundaralingam (P.B.)
B.A. Econ (Ceylon)
F.C.I.B. (London)
M.A. Econ (Jaffna)

Vice Presidents
Mr.M.Palasingam (B.C.)
Mr.M.P.Vethanayagam (N.S.B.)
Mr.V.Vimalasingham (COM. B.)

Joint Secretaries
Mr.A.Rasanayagam (B.C.)
Mr.A.Gopalakrishnan (P.B.)

Treasurer
Mr.S.Dharmarajeswaran (P.B.)

Asst. Treasurer
Miss.S.Vimalasingham (B.C.)

Committee
Mr.V.Sahadevasangary (P.B.)
Mrs.R.Pathmanathan (B.C.)
Mr.A.Ganeshalingham (P.B.)
Mr.C.C.Somasunthoram (P.B.)
Mr.J.T.Saverimuttu (COM. B.)


The Chief Editor,
Ceybank News,
Bank of Ceylon,
Central Training Institute,
Maharagama.

Dear Sir,

**OUTSTANDING BANK EMPLOYEE FOR 2002**

We wish to inform you that our Association's Fifth Annual General Meeting was held on 6th April 2003. For this function we have selected an Outstanding Banker for 2002 from the Northern Province. We quote below the relevent portion from our annual report for your kind attention.

" Regarding Outstanding Bank Employee for the year 2002, though we have obtained the consensus from the Bankers' Association and conceded many a request to avoid direct involv-ment of the managers etc. the response has not been that encouraging. In case of substantial number of applications being received our intention was to select at least one from each Bank. Our task has been made simple by one senior manager with academic and professional qualifications with sufficient experience has submitted his application. He has submitted along with recommendation by his superiors and the driving forces in the Banking education field like the Institute of Bankers of Sri Lanka and the accredited institution in Jaffna Viz Jaffna College, Vaddukoddai, as under -

1. Mr.H.M.R.Ellepola - Secretary General
2. Mr.Noel.A.Vimalendran - Vice Principal

We append below a relevant quote from the letter from Mr.Ellepola. 'Mr.Sivaratnam was also largely responsible, I believe, for creating an awareness among the school leavers in Jaffna about the new professional qualifications in banking and finance available in Sri Lanka in the Tamil medium as well. Also, he was personally responsible for organizing an induction programme and also for the registration of over 300 students to sit the examination at the inauguration of the programme. His activities over the last ten years amply demonstrate his dedication and commitment to promote banking education in the Northern Region. His record of service alone is sufficient testimony to his vision for his community and banking education in general."

Contd.../2.

The Committee therefore selected Mr.N.Sivaratnam B.A.(SL), A.I.B.(SL), P.G.Dip in P.Ad. as the Outstanding Bank Employee for 2002.

Thanking you.

Yours faithfully,

[signature]

Hony. Secretary.

# வங்கியாளர்களுக்கு கௌரவிப்பு

யாழ்.மாவட்டத்தில் பணிபுரியும் வங்கியாளர்களுக்கான இவ்வாண்டு கௌரவ விருது



இலங்கை வங்கியின் ஸ்ரான்லி வீதிக்கிளை முகாமையாளர் என்.சிவரட்ணத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.
இவர் யாழ்.மாவட்ட வங்கியாளர்சங்கத்தின் செயலாளராகவும்

இலங்கை வங்கி நிறுவனத்தின் ஆலோசகராகவும் பணியாற்றி வருகின்றார். இவருக்கான விருதைவங்கி ஓய்வூதியர்கள் சங்கம் வழங்கிக் கௌரவித்துள்ளது.

தினக்குரல் 07.04.2003

# CENLEAD

Centre for Leadership Excellence and Personality Development

(Registration No. 33002 of 25-04-2000)

No. 84, St. Benedict Mawatha, Kotahena, Colombo 13.
Tel/Fax : 2330923

## MOST OUTSTANDING PROFESSIONAL FOR THE YEAR 2008



*This Certifies that*

Mr. N. Sivaratnam

Asst General Manager of Bank of Ceylon (Northern Province)

**WAS ADJUDICATED AS ONE OF THE MOST OUTSTANDING PROFESSIONAL FOR THE YEAR 2008**

**ON THE 31ST DAY OF DECEMBER 2008**

Given at Colombo under the Common Seal of the Institute

K. Kuhathasan

Dr. K. Kuhathasan PhD. (HRD)
University of Arizona (USA)
Training and Management Development Specialist
Director, Cenlead

# தன்னம்பிக்கை மிக்க தயாள சிந்தையர்

''மனதில் உறுதி வேண்டும்
வாக்கினிலே இனிமை வேண்டும்
நினைவு நல்லது வேண்டும்
நெருங்கிய பொருள் கைப்படவேண்டும்''

இது பாரதி வகுத்த வாழ்வியல் இலக்கணம். இந்த இலக்கணத்துக்கு எடுத்துக்காட்டாக எம் மத்தியில் வாழ்ந்து வரும் ஒரு நல்ல மனிதர் அன்பர் ந. சிவரட்ணம் அவர்கள் என்றால் மிகையாகாது.

பாரதிசெப்பிய இந்த உயர்ந்த பண்புகளே இவரது பலங்கள். இவரது வாழ்வை இவை உயர உயர உந்தித் தள்ளின. வேண்டியதெல்லாம் கைப்பட வைத்தன. இவர் வாழ்வில் எதிர்ப்பட்ட இன்னல்களை எல்லாம் எள்ளி நகையாடின. ஏழ்மையைப் புறந்தள்ளின. ஒளிமயமான வாழ்வை வழங்கின. சாமானிய ஏழைக்குடிமகனாக இருந்தவரை உயர்வங்கியாளனாக்கின.

உயர் வங்கியாளராக இருந்தும் பேச்சுக்கு இனியர், காட்சிக்கு எளியர். காலநேரமறிந்து சேவையாற்றுவதில் ஒரு கர்மவீரர். இவரது சேவையால் வங்கி உயர்ந்தது. வங்கியால் இவர் உயர்ந்தார். தனக்கென வாழாப் பிறர்க்குரியாளராக, தான் பெற்ற இன்பத்தை இவ்வையகம் பெற வேண்டுமென்ற இலட்சிய வேட்கை உடையவராக என்றும் செயற்படுபவர்.

இவருடனான தொடர்புகள் இனிமையான படிப்பினைகளைத் தந்தன. தினக்குரலில் வெளிவந்த இவரது இரு கட்டுரைகள் காலத்தை வென்று நிற்கும் காவியங்கள் எனலாம். அவற்றுள் ஒரு முத்தை என்னால் என்றும் மறக்க முடியாது. 'எம்மை ஏளனம் செய்பவர்களே எமது வாழ்வின் உயர்வுக்கான ஏணிப்படிகள்' என்றார். இவ்வாசகத்தைப் பல முறை படித்தேன், சுவைத்தேன், உண்மையை உணர்ந்தேன்.

மணிவிழா நாயகராகத் திகழும் இந்நன்னாளில் இவ்வன்பரது வாழ்வு மென்மேலும் சிறந்தோங்க வாழ்த்துவதிற் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

ஆ.சி.நடராஜா,
முகாமையாளர்.

தினக்குரல்,
யாழ்ப்பாணம்.

உதயன்

උදයන් Uthayan

சமூக வளர்ச்சிப் பணிகள் மேலும் உயர்க!

செய்யும் தொழிலே தெய்வம். மெய் வருத்தம் பாரார், பசி நோக்கார், கண் துஞ்சார், கருமமே கண்ணாயினார்.

இவை மூத்தோர் எமக்குக் காட்டிய வாழ்க்கைக்கான, அதன் உயர்ச்சிக்கான பல நல்வழிகளில் இரண்டு.

ஆனால் ''தற்காலத்தில்'' இவை யாவும் வெறும் வாசகங்கள் மட்டுமே. உழைப்பே உயர்வுக்கு வழி என்பதற்கு நேர்மாறாக குறுக்கு வழியில் உயர்ச்சி காண விரும்புபவர்களே இன்றைய சமூகத்தில் மிகப்பெரும் எண்ணிக்கையினர். இத்தகைய எமது சமூகச் சூழலில் புறநடையாக, கஞ்சிக்குள் பயறாக இருப்பவர்களில் ஒருவரே இலங்கை வங்கியின் வட பிராந்திய உதவிப் பொது முகாமையாளர் பதவியிலிருந்து ஓய்வுபெறும் அன்பர், நண்பர் ந.சிவரத்தினம்.

இலங்கை வங்கியின் உயர் அதிகாரியாக அறிவதற்கு முன்னர் சமூக கொடுமைகளைத் தாங்கிக் கொள்ள முடியாத, அடாவடித்தனங்களையும் அட்டூழியங்களையும் அடக்கு முறைகளையும் கண்டு நெஞ்சம் கொதிக்கும் ஒரு சமூகப் போராளியாக நான் அவரை அறிவேன்.

தமிழர்கள் இந்த நாட்டின் பிரஜைகள் அல்லர்; அவர்கள் அடி பணிந்து வாழ வேண்டியவர்கள் என்ற இறுமாப்புடன் இலங்கை அரசாங்கங்களின் ஆயுதப் படைகள் காலத்துக்கு காலம் புரிந்த அட்டூழியங்களை ஏனையோருக்கு- வெளியுலகுக்குப் பிரசித்தப்படுத்த வேண்டும்- எழுத்தில் வடிக்க வேண்டும்- பதிவாக்க வேண்டும் என்ற எழுச்சி மிகுந்த ஒரு படைப்பாளியாய்ப் பல வருடங்களுக்கு முன்னரே அவரை அறிந்திருந்தேன்.

நெஞ்சு பொறுக்குதில்லையே இந்த நிலை கெட்ட மனிதரை நினைந்து விட்டால் என்று மனம் வெந்து வெந்து உதயனுக்குப் பல படைப்புகளை வடித்தவர் அவர். அதனால் அவர் உதயனின் நெருக்கமான உறவினர்.

அத்தகையவர் இப்போதைய இத்தகைய ஓர் உயர் பதவிக்கு உயரக்கூடும் என்று அப்போது என்னைத் தோன்றவில்லை. அடக்கம் நிறைந்த தமிழ்ச் சமூக உணர்வாளர்களில் ஒருவராக நின்றவர்.

ஆனால் அவர் தமது வாழ்க்கையை இறங்கு முகமாக்காது ஏறுமுகமாக்கி புதிய பதவியை எட்டிப்பிடித்தும் சாதனைகள் பல நிகழ்த்தி மிளிர்கின்றார்- தமது சொந்த வாழ்விலும் சமூக வாழ்விலும் அதன் வளர்ச்சியிலும்.

அவரது தொழில்சார் திறமையும் கடும் உழைப்பும் இத்தகு உயர்ச்சிக்கு வழி செய்தன என்பது சொல்லித் தெரிய வேண்டிய ஒன்றல்ல. தமது வங்கியூடாக மக்கள் வளர்ச்சிக்கும் வளத்துக்கும் சமூக மேம்பாட்டிற்கும் அவர் ஆற்றிய பணிகள் அடக்கமாக மேற்கொள்ளப்பட்டவை. சமூகப் பொறுப்புணர்ச்சியும் தொலை நோக்கும் கொண்ட அத்தகைய பணிகள் அவரது இளைப்பாறுக் காலத்திலும் தொடரும் என்று நிச்சயம் நம்பலாம்.

பணி செய்க சிறப்பாக; வாழ்க நலமாக; தமது மனம்சேர் இலக்குகளை எய்த இறைவன் அருள் கிடைக்கட்டும். மனதார வாழ்த்துகின்றேன்.

ம.வ. கானமயில்நாதன்
பிரதம ஆசிரியர்
உதயன்-சஞ்சீவி

New Uthayan Publication (Pvt) Ltd.
361, KASTHURIYAR ROAD, JAFFNA.
Telephone & Fax
021 - 222 2030, 2005, 3837, 7163
021 222 9933, 3837, 9944

# எல்லோரையும் மதிக்கும் பண்பின் இலக்கணன்

''இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன் கண்விடல்''

என்பது வள்ளுவன் உலகுக்கு உரைத்த முகாமைத்துவ எண்ணக்கரு.

முகாமைத்துவம் பற்றிய வள்ளுவனின் கருத்து ஏற்புடையதென்பதற்கு இலங்கை வங்கியின் வடக்கு உதவிப் பொது முகாமையாளர் உயர்திரு என்.சிவரத்தினம் அவர்கள் சாலப் பொருத்துடையவர்.

அமைதியான சுபாவம், ஆழ்ந்தகன்ற நுண்ணறிவு, எதனையும் திட்டமிட்டுத் திறம்படச் செய்யும் ஆற்றல். நிலைமைகளுக்கேற்ப தீர்மானம் எடுக்கும் ஆளுகை எனப் பல்பரிமாண ஆளுமையின் உரு வமாக அவரைப் பார்க்க முடியும்.

தனது பதவியின் உயர் பெறுமானத்தை இம்மியளவும் கணக்கெடுக்காமல் எவருடனும் எளிமையாகப் பழகும் பண்பும் எவருடைய கருத்தையும் ஏற்று அதில் இருக்கக்கூடிய திறன் காணும் இயல்பும் உயர்திரு சிவரத்தினம் அவர்களின் தனித்துவ அடையாளங்கள்.

இதன் காரணமாக பொறுப்பு வாய்ந்த தனது பணியைத் திறம்பட ஆற்றி – எதிர்கால வங்கியாளர்களுக்கும் ஏனைய நிர்வாகிகளுக்கும் எடுத்துக் காட்டக்கூடிய சான்றாண்மையாளராக அவர் திகழ்கிறார்.

க. பொ.த. உயர்தரத்தில் சித்தியடைந்து பல்கலைக்கழகம் செல்லும் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்களைக் கௌரவிக்கும் புதிய அத்தியாயமொன்றை இலங்கை வங்கியும் வலம்புரி நாளிதழும் இணைந்து மேற்கொண்டு வருகின்றது. இந்த உயரிய – அனைவராலும் பாராட்டப்பட்ட இக் கௌரவிப்பு நிகழ்வின் முழு உரித்தும் திரு. சிவரத்தினம் அவர்களின் சிந்தனையில் உதித்தவை.

வகிக்கின்ற பதவியுடன் மட்டும் நின்றுவிடாமல் அதற்கப்பால் சென்று எங்கள் சமூகத்திற்கும் மாண வர்களுக்கும் எந்தெந்த வகையில் உதவ முடியுமோ அதையெல்லாம் செய்து காட்டிய பெருமை அவரு க்குரியது.

இலங்கை வங்கியின் வடக்கு உதவிப் பொது முகாமையாளர் என்ற எல்லை கடந்து சிறந்த எழுத்தாளராக அவரைப் பார்ப்பது பத்திரிகைத்துறையின் பொறுப்பாகிறது.

"மும்பாய் பயணம்" என்ற பயணக் கட்டுரையை வலம்புரியில் அவர் எழுதியபோது வாசகர்கள் மத்தியில் அதற்கு இருந்த வரவேற்பு, அவரின் எழுத்தாளுகையின் திறத்தை சுட்டி நின்றது.

எல்லோரையும் மதிக்கும் உயர்பண்பை தனது அணிகலனாகக் கொண்ட உயர்திரு சிவரத்தினம் அவர் களின் ஓய்வு காலம் சிறப்பாக அமைய எல்லாம் வல்ல இறைவன் துணை நிற்கப் பிரார்த்திப்பதுடன் ஓய்வு காலத்தில் தனது எழுத்தாற்றல் திறத்தின் படைப்புகளை எங்கள் இளைய சமூகத்திற்குத் தரவேண்டும் எனவும் இச்சந்தர்ப்பத்தில் கேட்டு அவரை வாழ்த்துகின்றோம்.

என். விஜயசுந்தரம்
பிரதம ஆசிரியர்.
(வலம்புரி நாளிதழ்)

பலதுறைகளைச் சார்ந்த சமூக சிந்தனையாளர்களது கல்வி சார் அனுபவங்களை உள்ளடக்கி தினக்குரல் பத்திரிகையின் "பொய்கை நூல்" வெளியீட்டின் "ஆழப்பதிந்த வேர்கள்...." என்னும் தலைப்பில் பிரசுரமான தெரிவு செய்யப்பட்ட சிறந்த கட்டுரைகளுள் ஒன்றாக 2009ஆம் ஆண்டு வெளியான சிந்தனைத் தொகுதியிலிருந்து பிரதி பண்ணப்பட்டது.

<u>அநுபந்தம்</u>

# அவதூறு பண்ணுபவர்களை என்றும் மறவாதீர் அவர்களே எம்மை வளர்த்துவிடும் ஆசான்கள்



ந.சிவரத்தினம்
செயற்பாட்டு முகாமையாளர்,
இலங்கை வங்கி, வடபிராந்தியம்.

வல்வெட்டித்துறையிலுள்ள ஆதிகோயிலடி என்ற பின்தங்கிய கிராமந்தான் எனது பிறப்பிடம். மிக வறிய குடும்பத்தில் என்னை வளர்த்து உயர்த்த என் தாய் வள்ளியம்மாள் அரும் பாடுபட்டார். சிவகுருநாதவித்தியாசாலையில் ஆரம்பக் கல்வியை முடித்த நான் இடைநிலைக் கல்வி கற்கச் சிதம்பராக் கல்லூரிக்குச் சென் றேன்.

அங்கு வழிப்படுத்த ஆளில்லாத எனது கல்விக்கு நண்பன் பாலச்சந் திரன் (அல்லா) வழித்துணையாக அமைந்துவிட்டான். அவன் தான் எனது அன்றைய வழிகாட்டி. தனது தமையனார் மோதிலால் நேருபோல் நானும் ஒரு சட்டத்தரணியாகி நீதிமன்றுகளிலே அரசியலிலே புகழ்பெற வேண்டுமென ஆசையூட்டினான்.

அன்றைய நாளில் தரம் 8 இல் கற்கும் மாணவர்களைத் தகுதியடிப்ப டையில் விஞ்ஞானப்பிரிவு, கலைப்பிரிவு என வகுத்து க.பொ.த. சாதா ரண தரப்பரீட்சைக்குத் தயார்ப்படுத்தும் முறை இருந்தது. விஞ்ஞானப் பிரிவு உயர்வாகக் கருதப்பட்டது. விஞ்ஞானப் பிரிவில் கற்கும் தகுதியில் லாத மாணவரது பெற்றோர் அதிபரை அணுகித் தமது பிள்ளைகளை விஞ் ஞானக் கற்கை நெறியிற் புகுத்தப் பாடுபடுவர். அந்நிலையில் நான் விஞ் ஞான, கணித பாடங்களில் போதிய சித்தியைக் கொண்டிருந்த போதும் நண்பனின் அபிலாசைப்படி சட்டத்தரணியாக விரும்பிக் கலைப்பிரிவில்

போய்ச் சேர்ந்தேன். O/L பரீட்சையில் தேறி A/L கலைப்பிரிவில் கற்க லானேன்.

உயர் வகுப்பில் விஞ்ஞானப்பிரிவு, கலைப்பிரிவு மாணவர்களை ஒன்று சேர்த்து வாராந்தக் கூட்டம் நடைபெறும். அங்கு கலைப்பிரிவு மாணவர் களை ஏளனமாகக் கணிக்கும் நிலை நிலவியது. ஒரு நாள் கூட்டம் முடிந்து வெளிவரும் போது விஞ்ஞானப் பிரிவிற் கற்ற என் ஆப்த நண் பர் (தற்போது U.K யில் பிரபல பல்வைத்தியர்) பழனிவேல் நட்பாக ஆனால் காரசாரமாக என்னுடன் ஒரு விவாதத்தில் இறங்கினார்.

கலைப்பாடங்கள் ஏற்கனவே இருப்பதை பற்றியும் நடந்தன பற்றியுமே இருக்குமென்றும் விஞ்ஞானப் பாடங்கள் புதுமைகளைக் கண்டுபிடிக்க வும் தொழில்நுட்பத்தை வளர்க்கவும் உதவுமென்றும் முழங்கினார். என து உள்மனம் இவ்வுயர்வை ஏற்றுக்கொண்டாலும் பலர் முன்னிலையில் அவர் கேட்ட ஒரு கேள்விக்கு என்னாற் பதில் கூறமுடியாமை பெரும் அவமானமாகியது. இலை ஏன் பச்சையாக இருக்கிறது? என்பது கேள்வி. இதற்குக் கூட உன்னாற் பதில் கூறமுடியாதென்றால் நீ படிப்பதில் என்ன பயனுண்டு? என்றார்.

பதில் கூறமுடியாதிருந்த அவமானத்தால் அன்றிலிருந்து பாடசாலைக் குச் செல்வதைக் கைவிட்டேன். அதிபர் சில மாணவர்களை அனுப்பி என்னை அழைத்தார். மீண்டும் O/L விஞ்ஞானப் பிரிவில் இறங்கிக் கற்க அனுமதி கோரினேன். சட்டம் இடங்கொடாதென்றார்.

அம்மாவுக்கும் சாக்குப் போக்குச் சொல்லிவிட்டு மற்றொரு நண்பனின் வழிப்படுத்துதலில் ரியூாறி சென்று வர்த்தகப் பாடங்களைப் படித்தேன். அக்காலத்தில் க.பொ.த.சாதாரண தரப்பரீட்சை வருடத்தில் இருமுறை நடைபெறும். ஒன்று ஒகஸ்டில் மற்றையது டிசம்பரில் எனவே ஆகஸ்ட் பரீட்சையில் தோற்றி வர்த்தக பாடங்களிற் சித்தியடைந்தேன். இருந்தபோ திலும் விஞ்ஞானம் கற்கவேண்டுமென்றே என்மனம் விடாப்பிடியாய் நின்றது.

மீண்டும் சோதனை! தாயார் கே.துரைரட்ணம் எம்.பி.யிடம் கூட்டிச் சென்றார். அவர் என்னை யாழ்.கல்வித்திணைக்களம் அழைத்துச் சென்று உயர் அதிகாரிகளுடன் கதைத்துப் பார்த்தார். தோல்வி கண்டார். திரும்பி வரும்போது தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை வித்தியாலயத்தில் அதிபர் தம்பிப்பிள்ளையுடன் கதைத்து அங்கு சேர்த்து விடுவதில் வெற்றி கண்டார். விஞ்ஞானப் பிரிவில் கற்று டிசெம்பர் பரீட்சையில் சித்திய டைந்தேன்.

கற்றற் காலத்தில் ஒரு வருடத்தை இழந்தாலும் உயர்தர வகுப்பில் கலை, வர்த்தகம், விஞ்ஞானம் எத்துறையை வேண்டுமானாலும் கற்குந் தகுதியைப் பெற்றேன். சுமார் 15 பாடங்களிற் பண்டிதனானேன்.

இந்நிலையில், இலை ஏன் பச்சை நிறமாக உள்ளது? என்னும் கேள் விக்கும் பதில் கூறக்கூடிய நிலையில் எனது நண்பனைச் சந்திக்க மீண் டும் வல்வை சிதம்பராக் கல்லூரிக்குச் செல்ல என் எண்ணம் தூண்டி

யது. அதன்படி மீண்டும் அங்கு போய் எனது நண்பரிடம் உரிய பதிலைக் கூறினேன். அவரும் நண்பா! என்னுடைய குளிசை உனக்கு வேலை செய்திருக்கிறது எனக்கூறி வாழ்த்தி சர்வகலாசாலைக்குச் செல்ல ஆயத்தமாகிக் கொண்டிருந்தார்.

நான் அதே பாடசாலையில் புதிய A/L விஞ்ஞான மாணவனாக எனது கல்வியைத் தொடர்ந்தபோதும் மேற்கொண்டு படிக்க முடியாத குடும்பப் பொறுப்பு என்னைத் துரத்தியது. இதனால் பல பெரியவர்களைச் சந்தித்து எனது நிலைமையை விளக்கினேன். ஆனால் யாரும் முன் வந்து உதவி செய்யவில்லை.

வர்த்தமானியைப் பார்த்துப் பல வேலைகளுக்கு மனுப்பண்ணினேன். ஒரே நேரத்தில் இரு வேலைகள் கிடைத்தன. ஒன்று கச்சேரி சிறாப்பர் உதவியாளர் பதவி மற்றும் இலங்கை வங்கி லிகிதர்/உதவிக் காசாளர் பதவி.

எனது மதிப்பிற்குரிய ஆசிரியர் திரு.ஆர்.இராசநாயகத்தின் புத்திமதிப்படி இலங்கை வங்கியில் உதவிக் காசாளராக 1970 இல் இணைந்து கொண்டேன்.

நான் வங்கியில் சேர்ந்த பின் மற்றொரு அவமானம் காத்திருந்தது. ஏறக்குறைய முன்னர் ஏற்பட்ட கலைப்பரிவு மற்றும் விஞ்ஞானப்பிரிவு ஏற்றத்தாழ்வு போல இங்கும்காசியர்-கிளாக் என்ற உச்சரிப்புகள் எனக்கு ஏளனமான ராகங்களாக செவிப்பட்டன. ஒரே மனப்போராட்டம். அந்த அவமானத்தையும் ஒரு சவாலாக ஏற்கவேண்டி இருந்தது.

வெளிவாரியாகப்படித்தேன்.... பட்டங்களைப்பெற்றேன். வங்கியிலும் F.I.B எனும் கௌரவப்பட்டத்தைப் பெற்றேன். என்னை அவமானப்படுத்திய என்னிலும் கூடிய சேவையுடைய சில அதிகாரிகளை விட உயர் பதவிக்கு அவர்களது காலத்திலேயே என்னை உயர்த்திக்கொண்டேன்.இதற்கு எல்லாம் ஊக்கமளித்தவர் இலங்கை வங்கியின் வளர்ச்சிப்பரிமாணத்தில் பல புரட்சி கர மாற்றங்களை புகுத்தியவரும் எனது குருவாக விளங்கியவருமான வங்கியாளர் கே.சிவகணநாதன் ஆவார்.

எனது கற்றல் பாதைகள் இன்றைய இளையதலைமுறையினருக்கு ஒரு முன்னுதாரணமாக அமையலாம் என்று நம்புகின்றேன். அவதூறு பண்ணியவர்களை என்றும் மறவாதீர்கள். அவர்களே எம்மை வளர்த்துவிடும் ஆசான்கள்.



வணிகக்குரல்



# எனது குடும்பச் சூழல், கடின உழைப்பு இவையே உயர்வுக்கான ஏணிப்படிகள்



**இலங்கை வங்கியின் வடபிராந்திய உதவி முகாமையாளராகப் பதவி உயர்வு பெற்ற என். சிவரட்ணம் வழங்கிய சிறப்புச் செவ்வி**

**தங்கள் கல்விப் பாதை பற்றி....**